சினிமாவைப் பார்த்து ரசிப்பதே தனி த்ரில்லாகத்தான் இருக்கும்.

# பென் டிரைவ்



காந்தியடிகள் வெள்ளையருக்கு எதிரான ஒரு போராட்ட வழியாக உப்புச் சத்யாகிரகத்தில் ஈடுபட்டார். அதற்காக தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை மீண்டும் நடத்தி இருக்கிறது கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த காந்தி உலக மையம். “அழிக்கவே முடியாத, இயற்கையை மாசுபடுத்தும் நச்சுப் பொருளான பிளாஸ்டிக்கின் பயன்பாட்டை எதிர்த்துத்தான் இந்த யாத்திரை. காந்தியடிகள் தண்டி யாத்திரையை மேற்கொண்டபோது, அவருடன் பங்கேற்றவர்கள் 78 பேர். அதை நினைவு கூறும் வகையில், எங்கள் யாத்திரையிலும் 78 பேரை பங்கேற்கச் செய்தோம்.” என்கிறார், காந்தி உலக மையத்தின் நிறுவனர் எம்.எல்.ராஜேஷ்.

